முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவது நம்முடைய அரசாங்கம் அல்ல. M.C.I.-யும்—Medical Council of India —ம் மத்திய சர்க்காரும்தான். எனவே எங்களுடைய பணி Essentiality Certificate கொடுக்கப்படுவதோடு நிறுத்தப்பட்டு விடுகிறது. அப்படி வாய்ப்புள்ள இடத்தில், நீங்கள் சொல்வதைப்போல, Trust அமைத்து, மருத்துவக் கல்லூரி அமைப்பதற்காக முறையாக பரிசீலனை செய்தால், அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு இருந்தால், M.C.I. விதித்திருக்கிற அனைத்து விதிமுறைகளும் நிறைவேற்றப்பட்டு இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு Essentiality Certificate கொடுப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால் இறுதியான முடிவு M.C.I.-யும், மத்திய சர்க்காரும்தான் எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல் முருகன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது தூத்துக்குடி, கன்னியாகுமரி, வேலூர், விழுப்புரம் என்றார். நான் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவன். கடலூரிலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அரசு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. கே. பாண்டுரங்கன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

7 –

ஆரம்ப சுகாதார நிலையம்

***18666—திரு. கே. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, வேலூர் வட்டம், விரிஞ்சிபுரம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் தொடங்க அரசு முன்வருமா?

[2002 அக்டோபர் 25

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், விரிஞ்சிபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிஞ்சிபுரம் கிராமத்திலே சற்றேறக்குறைய 30,000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருகிறார்கள். குறிப்பாக 15,000-க்கும் மேற்பட்ட இஸ்லாமிய பெருமக்களும், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்ற காரணத்தினாலே, அவர்கள் மருத்துவ வசதி வேண்டுமென்றால், அவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினாலே, மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலாலே, சங்க காலத்திலே கடையெழு வள்ளல்களும், கடந்த காலத்திலே எட்டாவது வள்ளலாக வாழ்ந்த நம் புரட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய காலத்திலே அன்னதானத் திட்டத்தையும், இதயம் காப்போம் திட்டத்தையும், அள்ளித் தந்த நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர், நம்முடைய குடும்பத்தினுடைய குல விளக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கின்ற அளவிலேயும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய மக்களுக்கு மருத்துவ வசதி கொடுக்கின்ற அடிப்படையிலேயும், தாயுள்ளம் கொண்ட தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்கள், மறுபரிசீலனை செய்து, சிறப்பு நிகழ்வாகக் கருதி, விரிஞ்சிபுரம் கிராமத்திலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அப்படி அனுமதித்தால் நிச்சயமாக பொதுமக்கள் அங்கே இடவசதியும், கட்டட வசதியும் இலவசமாகத் தருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திலே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒடுக்கத்தூரிலே ஒன்றும், பொய்கையிலே ஒன்றும், அணைக்கட்டிலே ஒன்றும், பள்ளிகொண்டாவிலே ஒன்றும் ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும் அங்கே இருக்கின்றன. அந்த ஒன்றியத்தினுடைய மக்கள்தொகை 1991-ன்

கணக்கெடுப்பின்படி 1,32,375. எனவே, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, அங்கு இருக்கிற நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களும் அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரத் தேவை அளிக்கக்கூடியனவாக இருக்கின்றன. இருந்தாலும், இப்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், அங்கே கூடுதலாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டிய தேவை இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிக அளவில் உருவாக்கி, அவற்றை குறைபாடுகளோடு நடத்தி, அதிருப்தியை சம்பாதிப்பதைவிட, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்னும் தரம் உயர்த்தி, சிறப்பான மருத்துவ சேவையை செய்வதற்கு திட்டமிட்டு இன்றைக்கு செயலாற்றி வருகிறது. அதற்காக இந்த அரசு நபார்டு வங்கி, உலக வங்கியினுடைய உதவிகளை நாடியுள்ளது. அதுவும் குறிப்பாக சொல்லப்போனால், முதன்முதலாக நபார்டு வங்கி சுகாதாரத் துறைக்கு, அதுவும் தமிழகத்திற்கு மட்டுமே கடனுதவி தர முன்வந்திருப்பது, நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சியால்தான். எனவே, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சீர்படுத்திவிட்டு, பின்னர் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தகுதியான இடங்களில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

8—

நுகர்பொருள் வாணிபக் கிடங்கு

***23379—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—